வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com   மலர் : 06   18.07.2025 வெள்ளிக்கிழமை   இதழ் : 199   பக்கங்கள் : 12

# அரசுக்கு மகாநாயக்கர்கள் வழிகாட்டல் வழங்கவேண்டும்

## கோருகிறார் ஜனாதிபதி அநுரகுமார



**கண்டி, ஜூலை 18**

**அரசாங்க விவகாரங்களில் மகா சங்கத்தினரின் தொடர்ச்சியான வழிகாட்டல்களை தாம் எதிர்பார்க்கிறார் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.**

கண்டி ஜனாதிபதி மாளிகையில் மல்வத்து - அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட நிர்வாக சபை தேரர்களை நேற்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, அரசாங்க விவகாரங்களில் மகாசங்கத்தினரின்

11

# மனித புதைகுழிக்கு நீதி கோரி கொழும்பில் நேற்று போராட்டம்

## பேரணியை தடுத்ததால் பதற்றம்





கொழும்பு, ஜூலை 18

அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் பேரணியாக மாறி நகர முற்பட்டபோது பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் பதற்றநிலைமை உருவானது. பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையே ஏற்பட்ட தர்க்கத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

சித்துப்பாத்தி மனிதப்

11

## மீன்பிடித்தவர் தவறிவிழுந்து உயிரிழந்தார்

கிளிநொச்சி, ஜூலை 18

மீன்பிடிக்க வலையை வீசியபோது குளத்தில் தவறி விழுந்தவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி - இரணைமடு குளத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில், சாந்தபுரத்தை சேர்ந்த பிச்சை துரைராசா (வயது 64) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அரசின் தமிழின படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டும்!

### வலி. கிழக்கு பிரதேச சபை ஒருமனதாக தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

தமிழ் மக்கள்மீது நிகழ்த்தப்பட்டது இனப் படுகொலை. இந்த இனப் படுகொலைக்கு இலங்கை அரசே காரணம். ஏனவே உள்நாட்டு விசாரணைகளில் முற்றிலும் எமது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் - சர்வதேச விசாரணையே வேண்டும்", என்று வலி. கிழக்கு பிரதேச சபை ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வலி. கிழக்கு பிரதேச சபையின் இரண்டாவது அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது இந்தப் பிரேரணையை தவிசாளர் தி. நிரோஷ் முன்வைத்தார். இதைத் தொடர்ந்து இந்தப் பிரேரணை ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அரியாலை மனித புதைகுழி; சர்வதேச விசாரணை தேவை

### மட்டு. மாநகர சபையில் தீர்மானம்

மட்டக்களப்பு, ஜூலை 18

அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி விவகாரத்தில் சர்வதேச விசாரணை வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது, து. மதன் என்ற உறுப்பினர் இந்தப் பிரேரணையை கொண்டு வந்தார். இதற்கு சபையிலிருந்த அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிமல், வசந்தவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா?

### உதய கம்மன்பில கேட்கிறார்

கொழும்பு, ஜூலை 18

அமைச்சர்களான பிமல் ரத்நாயக்கா, வசந்த சமரசிங்கவுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்து ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டபய ராஜபக்‌ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் சாதனையை முறியடிக்க வேண்டும் இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முற்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர்

11

## மூளையில் இரத்த கசிவால் பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 18

தலையில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட குடும்ப பெண் ஒருவர் மூளையில் ஏற்பட்ட இரத்த கசிவால் உயிரிழந்தார்.

சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியை சேர்ந்த கணேஸ்வரன் திகழ்மதி (வயது 45) என்பவரே நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருபவை வருமாறு,

குறித்த பெண்ணுக்கு கடந்த

11

## 80 சதவீத ஏற்றுமதிகளுக்கு இலங்கைக்கு வரி விலக்கு!

### அமெரிக்கா முன்வந்துள்ளதாக அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

நாட்டின் 70 முதல் 80 சதவீதம் வரையான ஏற்றுமதிகளை வரிகள் இல்லாமல் தமது சந்தைக்குள் அனுமதிக்க அமெரிக்கா முன்வந்துள்ளது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

11

யாழ். ஒருங்கிணைப்பு கூட்டம்!

## தனிநபர் விமர்சனம், குழப்பம் வாத பிரதிவாதத்துடன் நிறைவு!

- ராஜ்குமார், பிரதீபன் -

யாழ்ப்பாணம்,ஜூலை 18

தனிநபர் விமர்சனம், கேலி, குழப்பங்கள் மற்றும் கடும் வாதப் பிரதிவாதங்களுடன் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று நடைபெற்று முடிந்தது.

11

# இடமாற்றம் பெற்ற 40 ஆசிரியர்கள் கடமையை பொறுப்பேற்கவில்லை

## துணுக்காய் அபிவிருத்தி கூட்டத்தில் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஜூலை 18

துணுக்காய் கல்வி வலயத்துக்கு இட மாற்றம் பெற்ற 44 ஆசிரியர்களில் நால்வரே கடமையை பொறுப்பேற்றுள்ளனர். ஏனைய 40 ஆசிரியர்களும் கடமையை பொறுப்பேற்கவில்லை - என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன், கடமையை பொறுப் பேற்காத ஆசிரியர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ள அவர், மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் ஆசிரியர் நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவின் துணுக்காய் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றபோதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

மேலும், துணுக்காய் கல்வி வலயத்தில் ஏற்கனவே 40 ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தற்போது, 40 ஆசிரியர்கள் கடமைகளை பொறுப்பேற்காத நிலையில் வெற்றிடங்களின் எண்ணிக்கை

11

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாலி இராஜேஸ்வரி அம்மனை தினமும் தரிசிப்பதற்கு அனுமதி!

## காலை 6 - மாலை 6 மணி வரையே அவகாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தினமும் காலை 06 மணி முதல் மாலை 06 மணி வரையில் தற்காலிக பாதை ஊடாக சென்று வழிபாடாற்ற முடியும் என்று இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

ஆடிப்பிறப்பு தினமான நேற்று முதல் இந்த அனுமதி நடைமுறைக்கு வந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தை 35 வருடங்களின் பின்னர் சுதந்திரமாக வழிபட கடந்த ஜூன் 27ஆம் திகதி அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால், மறுநாளான 28ஆம் திகதியே பாதுகாப்பு காரணங்களை காட்டி ஆலயத்துக்கான அனுமதி மறுக்கப்பட்டது.

போர் காரணமாக அந்தப் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் இராணுவம் அந்தப் பகுதிகளை ஆக்கிரமித்து உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியது. எனினும், போர் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இந்தப் பகுதிகள் விடுவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



வவுனியா, ஜூலை 18

வவுனியா மாநகர சபையின் புதிய ஆணையாளர் பொ. வாகீசன் நேற்று வியாழக்கிழமை கடமைகளை பொறுப்பேற்றார்.

வவுனியா நகர சபை மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்ட காலம் முதல் அதனை ஆணையாளராக வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ. ரதீஸ்வரன் கடமையாற்றி வந்தார்.

இந்தநிலையில் புதிய ஆணையாளராக வடமாகாண மகளிர் விவகாரம், கூட்டுறவு அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய பொ. வாகீசன் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த நியமனத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் நேற்று முன்தினம் வழங்கி வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

# 15 இந்திய மீனவர்களுக்கு 31ஆம் திகதி வரை மறியல்!

மன்னார், ஜூலை 18

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி, ஜூன் 29ஆம் திகதிகளில் மன்னார் கடற்பரப்பில் இரு படகுகளுடன் 15 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்றைய தினம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது 15 இந்திய மீனவர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் லதீப் முகமட் அகமட், எதிர்வரும் 31ஆம் திகதி வரை இந்திய மீனவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-07)

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று நடந்தது!



யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இ. சந்திரசேகர், இணைத் தலைவர் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீபவானந்தராசா, ஜெ. ரஜீவன், க. இளங்குமரன், சி. சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அர்ச்சுனா இராமநாதன், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ம. பிரதீபன், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், அரச திணைக்கள பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள், பொலிஸார், முப்படைகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் 2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. மேலும், வீதி அவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு, போக்குவரத்து, மின்சாரம், வீடமைப்பு, சட்டம் ஒழுங்கு, கடற்றொழில், விவசாயம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. (ஐ)

# காணி உரிமைக்கான மக்கள் தலைவருக்கு ரி.ஐ.டி. அழைப்பு

வடமராட்சி, ஜூலை 18

காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவரும் சமூக செயல்பாட்டாளருமான இ. முரளிதரனை எதிர்வரும் 20ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத தடுப்பு பிரிவு தொலைபேசி மூலம் அறிவித்துள்ளது.

பரந்தனில் இயங்கும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரே இந்த அறிவிப்பை விடுத்தது டன், விசாரணைக்கான எழுத்து மூல அழைப்பாணையை மருதங்கேணி பொலிஸார் வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

காணி உரிமை தொடர்பில் கொழும்பில் கூட்டம் ஒன்றில் பங்கேற்றிருந்த நிலையிலேயே அவருக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வயலுக்குள் பாய்ந்து தடம்புரண்ட பேருந்து



யாழ்ப்பாணம், ஜூலை 18

வீதியிலிருந்து விலகிய பேருந்து வயலுக்குள் தடம்புரண்டு விபத்துக்கு உள்ளானது. நேற்று பிற்பகல் வேளை அராலி பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. இதில், தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

789 வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது.

யாழ்ப்பாணத்திலிருந்து சித்தன்கேணிக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற குறித்த பேருந்து அராலியில் வட்டுக்கோட்டை சந்தியை அண்மித்தபோது வேகமிழந்தது.

வீதியின் இரு மருங்கும் சென்ற பேருந்து வயலுக்குள் புகுந்து தடம்புரண்டது. பேருந்து தடம் புரண்டமைக்கான காரணம் உடனடியாகத் தெரிய வரவில்லை. வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

# சமய அறிவு போட்டியில் வென்ற மாணவர்க்கான பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

திருநெல்வேலி - தலங்காவற் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் நடத்தப்படும் சமய அறிவுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவன்று ஆலய முன்றலில் இந்தப் பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

தரம் 3 தொடக்கம் 11 வரை பயில்கின்ற 226 மாணவர்கள் எழுத்துமூல பரீட்சையில் தோற்றியிருந்தார்கள் இவர்களில் 127 பேர் பரிசுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் தரம் 3 பயிலும் செல்வன் தர்மேந்திரா தனோசியன் 95 புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். இந்தப் பதக்கம் அமரர் சி. பொன்னுத்துரை, அமரர் பொ. தங்கமாணிக்கம் ஆகியோர் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுள்ளது.



இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எந்திரி ச. சர்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார்.

ஆலய பிரதமகுரு விக்னராஜா சர்மா முன்னிலையில் நடைபெற்ற இந்தப் பரிசளிப்பு நிகழ்ச்சியில் பரீட்சைக்குழு சார்பாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ஆனைப்பந்தி அமெரிக்கன் மிஷன் பாடசாலை அதிபர் யோ.ஜெகஆனந்தம் ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.07.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## யாரிடம், யார் நீதியை கோருவது?

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் என்பதில் எவரும் குறை காண முடியாது. அது நிச்சயம் வேண்டும்தான். 2009இற்கு பின்னரான தமிழர் அரசியல் என்பது நீதி கோரும் அரசியலாகவே இருந்தது. ஆனால், கடந்த பதினாறு வருட கால அனுபவத்தில் நீதி கோரும் அரசியலில் சிறிய முன்னேற்றத்தைக்கூட காண முடியவில்லை. இந்த இடைப்பட்ட காலத்தில் பல அரசாங்கங்கள் வந்து சென்றுவிட்டன. ஒவ்வொரு அரசாங்கத்தின் காலத்திலும் இது தொடர்பில் பேசப்பட்டிருக்கிறது. விசாரணை ஆணைக் குழுக்கள் நிறுவப்பட்டன. விசாரணைகளும் நடைபெற்றன. அந்த அறிக்கைகளும் இருக்கின்றன. உண்மையில், நடவடிக்கை எடுக்கும் அரசியல் துணிவு அரசாங்கத்துக்கு இருந்தால் இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். ஆனால், இந்த விடத்தில் எந்தவோர் அரசாங்கமும் உரிய முறையில் செயல்படவில்லை.

இங்கு செயல்படவில்லை எனும்போது, அவர்கள் உரியமுறையில் செயலாற்ற விரும்பவில்லை - விரும்பவில்லை எனும்போது, அதற்கான அரசியல் துணிவு ஆட்சியாளர்களிடம் இருக்கவில்லை - இருக்கவில்லை எனும்போது எந்தவோர் அரசாங்கமும் தங்களின் அரசியல் சூழலிலிருந்து வெளியில் வரத் துணியவில்லை - அவ்வாறு துணிந்தால் அதிகாரத்தை இழக்க நேரிடும்.

இலங்கை இராணுவத்தை யுத்தத்தை வெற்றிகொண்ட கதாநாயகர்களாகப் பார்க்கும் போக்கு தென்னிலங்கையின் சாதாரண மனநிலையாக இருக்கிறது. இதற்கான அடிப்படை, யுத்தத்தின்போதான அனுபவங்களோடு தொடர்புபட்டிருக்கிறது. இவ்வாறானதொரு பின்புலத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் என்பதையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் பிரித்துப் பார்க்கும் சிந்தனை தென்னிலங்கையில் இல்லை. அதற்கான முயற்சிகளை அரசாங்கங்களும் செய்யவில்லை - ஏன் செய்யவில்லை என்பதற்கான காரணங்களை மேலே பார்த்தோம்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் சர்வதேச விசாரணை கோருவது முற்றிலும் சரியானதுதான் - நியாமானதுதான். ஆனால், இங்குள்ள கேள்வி சர்வதேச விசாரணையை யாரிடம் கோருவது? யார் கோருவது? பாதிக்கப்பட்ட மக்கள் கோரலாம். ஆனால், இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்காது விட்டால் எந்தவொரு தரப்பும் எதனையும் செய்ய முடியாது.

இலங்கையில் மாகாண சபைகள் முறைமை எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்பது நினைவிருக்கிறதா? வடக்கு - கிழக்குக்கு மட்டுமான மாகாண சபை முறைமை என்பதை அப்போதைய ஆட்சியாளர் ஜே. ஆர். ஜெயவர்த்தன மறுத்துவிட்டார். எந்தத் தீர்வாக இருந்தாலும் அது இலங்கைக்கானதாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இந்த நிலையில்தான் ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்காக இலங்கைக்குள் தலையீடு செய்த இந்தியாவோ இறுதியில் இலங்கைக்கான மாகாண சபைகள் முறைமையை அறிமுகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதுதான் உண்மையான நிலைமை.

இவ்வாறானதொரு பின்னணியில் எத்தனை புதைகுழிகளை தோண்டினாலும் அவைகள் நமக்குக் கடினமான உணர்வுகளை தந்தாலும் உண்மையோ வேறு. அதாவது, அரசாங்கம் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும். ஆனால் செம்மணிக்கு வரும் அரசாங்க அமைச்சர்களை வெளியே போ என்று துரத்துவதால் அவ்வாறான ஒத்துழைப்புகளை ஏற்படுத்த முடியாது. வடக்கு - கிழக்கில் தேசிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகளை. இணைத்துக் கொண்டு பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் குரல்களை முன்வைக்க வேண்டும். ஏனெனில், தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் வாக்களித்திருக்கின்றனர். நீதி வேண்டுமென்றால் அதனை சாதி பார்த்து ஒதுங்கும் மனோபாவத்துடன் அதனை அணுக முடியாது. பரந்த பார்வை அவசியம். அதேவேளை உலகம் பற்றிய பார்வை அவசியம். இந்த உலகில் நீதியை தருபவர்கள் என் போருக்கு நீதி மறுக்கும் முகமும் உண்டு. ஏனெனில், அதிகார உலகம் அப்படித்தான். அதிகார உலகம் என்பது கவிஞர்கள் கற்பனை செய்யும் விடயமல்ல. அது கற்பனைகளுக்கு மிகவும் அதிக தொலைவிலிருப்பது.

## தென்னைகளுக்கு மருந்து விசிறும் பணி கோப்பாயில் முன்னெடுப்பு!


யாழ்ப்பாணம், ஜூலை 18

தென்னை பயிர்ச் செய்கை சபையால் வெள்ளை ஈஆயை கட்டுப்படுத்தும் வேலைதிட் டம் நேற்று வியாழக்கிழமை கோப்பாய் பிரதேச செயலர் பகுதிகளில் முன்னெடுக் கப்பட் டது.

வெள்ளை ஈயை கட்டுப் படுத்தும் நோக்கில் இரு வாரங்கள் முன்னெடுக்கப் படும் இந் தத் திட்டம் உரும்பிராய் கமநல சேவை உத்தியோகத்தர்கள், தெங்கு பயிர் சபை உத்தியோ கத்தர்களால் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது, அந்தப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு சென்ற உத்தியோகத்தர்கள் தென்னை மரங்களுக்கு மருந்து விசிறும் இயந்திரங்களின் உதவியுடன் மருந்து விசிறினர்.

இந்த நடவடிக்கை தென்னை பயிர்ச் செய்கையின் தலைவர் கலாநிதி சுனிமால் ஜெயக்கொடி, தென்னை பயிர்ச் செய்கை சபையின் வட பிராந்திய முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் ஆகியோரின் பங்கேற் புடன் முன்னெடுக்கப்படுகிறது.



மருந்து விசிறும் பணி இன்றைய தினமும் கோப்பா யில் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்போது, பொது மக்களை யும் பங்களிப்பு செய்யுமாறு தென்னைப் பயிர் செய்கை சபையின் வடக்கு மாகாண முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் கேட்டுக் கொண்டார்.

(ஐ -03)

## சுழிபுரம் விக்ரோறியாவில் ஆடிப் பிறப்பு கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

சைவத் தமிழ் மக்களால் கொண்டாடப் படும் ஆடிப் பிறப்பு நேற்றைய தினம் கொண்டாடப்பட்டது. சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலும் அதிபர் திருமதி சுலபாமதி தலைமையில் ஆடிப்பிறப்பு கொண்டாடப் பட்டது.

இதன்போது ஆடிக் கூழ் தயாரித்து அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பாடசாலை சமூகத்தினர் குடித்து மகிழ்ந்தனர்.



ஆடிப்பிறப்பு சைவத் தமிழ் மக்களால் ஆடி மாத முதலாம் நாள் கொண்டாடப்படும் பண்டிகை ஆகும். சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை முதல் ஆனி வரையுள்ள ஆறு மாத காலம் உத்தராயண காலமாகும். இது தேவர்களுக்கு ஒரு நாளின் பகல் பொழுதாகும். அடுத்து சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாத காலம் தட்சணாயண காலமாகும். இது தேவர்களுக்கு இராப் பொழுதாகும். தட்சணாயணத்தின் தொடக்க தினம் ஆடி மாத முதலாம் நாளாகும். இக்காலம் கோடைகால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாகப் பெருகும் இயல்புடையது. இந் நாளில் தமிழ் மக்கள் ஆடிக்கூழ், கொழுக்கட்டை என்னும் உணவு வகைகளை விசேடமாகச் தயாரித்து குடும்ப விருந்தாக உண்டு மகிழ்தல், விசேட வழிபாடு செய்தல், உற்றார் உறவினர்களுக்கு இந்த உண்டி வகைகளை வழங்கி நல்லுறவைப் பேணல் என்பன வழக்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## ரயில் மோதி உயிரிழந்த ஒருவரின் சடலம் மீட்பு!

வவுனியா, ஜூலை 18

ரயில் மோதி உயிரிழந்த நிலையில் ஒருவரின் சடலம் வவுனியாவில் நேற்று மீட்கப்பட்டது.


நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இரவு தபால் ரயிலில் மோதி இவர் உயிரிழந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

எனினும், குறித்த நபர் ரயில் விபத்தில் உயிரிழந்தாரா அல்லது தவறான முடிவு எடுத்து உயிர் மாய்த்தாரா என்பது தெரியவரவில்லை. வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். நிதானம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். உற்சாகமான நாள்.

**மிதுனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கடகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். மறைமுக விமர்ச னங்கள் வந்து போகும். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும்.

**கன்னி**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். விருந்தினர்கள் வருகையால் வீடு களைக்கட்டும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**விருட்சிகம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மகரம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் எல்லாம் மனதில் நிழலாடும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புது முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள் சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. பனிப்போர் வந்து நீங்கும். திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் துறவற நூற்றாண்டு விழா நாளை யாழில்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணத்தில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் துறவற நூற்றாண்டு விழாவை புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய - கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், அகில இலங்கை இந்து மாமன்றம், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் என்பன இணைந்து நாளை 19 ஆம் திகதியும் நாளை மறுதினம் 20 ஆம் திகதியும் சிறப்பாக கொண்டாடவுள்ளன.

மதகுருமார்களின் ஆசியுடன், புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி மற்றும் புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் பிரதியமைச்சர் கமஹெதர திஸநாயக்கவின் அழைப்பின் பேரில், சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்ப நிகழ்வாக, யாழ்ப்பாணம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் பிரதம சிவாச்சாரியார் தலைமையில் பூஜை ஆராதனைகள் மற்றும் ஆசியுரை இடம்பெற்று, ஆலயத்திலிருந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் திருவுருவப்பட ஊர்வலம், மானிப்பாய் இந்துக் கல்லூரி வரை செல்லவுள்ளது.

கல்லூரி பிரதான மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வுகளும் முத்தமிழ் அரங்க நிகழ்வுகளும் சுவாமி விபுலானந்த அடிகளாரின் நினைவு முத்திரை வெளியீடும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

அரங்க நிகழ்வுகள் வரிசையில் நாளை மாலை 04. 00 மணி முதல் இரவு 07. 00 வரையிலும் நாளை மறுதினம் காலை 09. 00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும் அன்றைய தினம் மாலை 04.00 மணி முதல் இரவு 07. 00 மணி வரையிலும் நல்லூர் சிறீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இசையரங்கு, ஆய்வரங்கு மற்றும் இயலரங்கு முதலானவை நடைபெறவுள்ளன.

விபுலானந்த அடிகளின் வாழ்க்கை வரலாற்று ஓவியக் கண்காட்சியும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புத்தக விற்பனையும் 19 மற்றும் 20 ஆகிய தினங்களில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா நிகழ்வினைக் காண அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# பிரமிட் திட்டங்களின் பரவலுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் தேசிய விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 18

பிரமிட் திட்டங்களில் ஈடுபடுவதனால் ஏற்படும் பாதகமான பொருளாதார விளைவுகள் மற்றும் பிரமிட் திட்டங்களின் பரவலைத் தடுக்க அத்தகைய திட்டங்களை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது குறித்த தேசிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், ஜனாதிபதி செயலகம் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய பிரமிட் திட்டங்களின் பரவலுக்கு எதிரான தேசிய விழிப்புணர்வு வாரமாக ஜூலை 14 தொடக்கம் 18 ஆம் திகதி வரை பிரகடனப்படுத் தப்பட்டுள்ளதாக தெரிவித்தார் . மேலும், இந்த தேசிய விழிப்புணர்வு வாரத்தில் மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களை ஒருங்கிணைத்து பிரமிட் திட்டங்களில் ஈடுபடுவதனால் ஏற்படும் பாதகமான பொருளாதார விளைவுகள் மற்றும் பிரமிட் திட்டங்களின் பரவலைத் தடுக்க அத்தகைய திட்டங்களை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது குறித்து விழிப்புணர்வு அறிவுறுத்தல்கள் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார் .

இவ் விழிப்புணர்வு நிகழ்வின் வளவாளராக இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய அலுவலக சிரேஷ்ட முகாமையாளர் கே. தர்மேந்திரா கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சிவகரன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா. ஜெயகரன், உதவி மாவட்ட செயலாளர் உ. தர்சினி மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எ-05)

# வவுனியா மாநகர சபை பிரதி முதல்வருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு வருகிறது

வவுனியா, ஜூலை 18

வவுனியா மாநகர சபை பிரதி முதல்வருக்கு எதிரான வழக்கு இன்று 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வருகிறது.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா மாநகர சபைக்குட்பட்ட வைரவ புளியங்குளம் வட்டாரத்தில் ஜனநாயக தேசிய கூட்டணி சார்பில் போட்டியிட்ட ப. கார்த்தீபன் 33 வாக்குகளை பெற்று தோல்வியடைந்தார்.

எனினும் அவரது கட்சிக்கு கிடைத்த போனஸ் ஆசனத்தினூடாக மாநகர சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதுடன் பிரதி முதல்வராக ஆளும் கட்சியால் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இவர் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரத்திலேயே வாக்குரிமையை [illegible] மாநகர சபையில் போட்டியிட்டமை மற்றும் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டமைக்கு எதிராக வவுனியா மாநகர சபை உறுப்பினர்கள் இருவர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கே இன்று 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்ப டவுள்ளது. (எ-10)

# “மக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வது மிக அவசியம்”

யாழ்ப்பாணம், ஜூலை 18

அதிகரித்துச் செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் மற்றும் தரமற்ற பொருட்களின் விற்பனையால் மக்கள் அண்மைக் காலமாக பல்வேறு பிரச்னைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளது. இது எமது பிரதேசத்திலும் மக்கள் தமது அத்தியாவசிய உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் அவர்களின் சுகாதாரத்தை மட்டுமல்லாது ஆரோக்கியத்தை பாதுகாப்பதிலும் பெரும் சவாலாக இருப்பது வேதனைக்குரியது என வேலணை பிரதேச சபையின் உறுப்பினர் திருமதி அனுஷியா ஜெயகாந்த் தெரிவித்தார்.

வேலணை பிரதேச சபையின் இரண்டாவது மாதாந்த கூட்டம் நேற்று முன்தினம் தவிசாளர் அசோக்குமார் தலைமையில் சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ-05)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மல்கம் ரஞ்சித் ஆண்டகை மீது பழிபோடுவதற்கு அரசு முயற்சி

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுலை 18

**தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாட்டாளர்களாக செயல்பட்ட ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரின் நியமனம் தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயம் பாரதூரமானது. இவ்விடயத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மீது பழிபோட அரசாங்கம் முயற்சிக்கிறது. உண்மையை கத்தோலிக்க சபை வெளிப்படுத்த வேண்டுமென பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் இந்த அரசாங்கம் செயற்படுகிறது. ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நடுத்தர மக்களை பாதுகாப்பதாக குறிப்பிட்டார்கள். ஆனால் இன்று நடுத்தர மக்களின் தொழில் நடவடிக்கைகளை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது.

ஜனாதிபதியின் விவகாரத்தில் அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாடு அரச அதிகாரிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அரச சேவையாளர்கள் அரசாங்கத்துக்கு எதிராக வெகுவிரைவில் குரல் எழுப்புவார்கள்.

அரச சேவையை வினைத்திறனாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு அச்சேவையை அரசியல்மயப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை மக்கள் வெகுவிரைவில் விளங்கிக் கொள்வார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாட்டாளர்களாக செயற்பட்ட சானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரின் நியமனம் தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயம் பாரதூரமானது.இவ்விருவரும் மக்கள் விடுதலை முன்னணியின் ஊடக சந்திப்புக்களை நடத்தினார்கள்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்ட விடயத்தின் உண்மையை கத்தோலிக்க சபை வெளிப்படுத்த வேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுவதாக அரசாங்கம் குறிப்பிடுவது வரவேற்கத்தக்கது. தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்ட பொய்களுக்கு முடிவு அப்போது தான் கிடைக்கும்-என்றார். (அ)

# எதிர்க்கட்சிகளை முடக்க அரசாங்கம் தீவிர கவனம்

## ஐக்கிய மக்கள் சக்தி விசனம்

கொழும்பு, ஜுலை 18

உள்ளூராட்சி மன்றத் அதிகார சபைகளை ஸ்தாபிக்கும் போது கட்சியின் கொள்கை மற்றும் தீர்மானங்களுக்கு எதிராக செயற்பட்ட கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளதால், எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கு அரசாங்கம் தீவிர அவதானம் செலுத்தியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-திருடர்களைப் பிடிப்பதற்கும், ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கும் நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஊழல் எதிர்ப்புக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஊழல் என்று குறிப்பிட்டுக் கொண்டு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை அச்சுறுத்துவதாயின் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காகவே நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம்.நீதிமன்றம் சுயாதீனமான முறையில் செயற்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

ஊழல்வாதிகளை பிடிப்பதாக இந்த அரசாங்கம் தேர்தல் பிரசார மேடைகளில் குறிப்பிட்டது. பல பில்லியன் ரூபா மோசடி செய்தவர்கள் உள்ளார்கள்.அந்த வழக்குகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்களை முடக்குவதாக குறிப்பிட்டார்கள், உகண்டாவில் இருந்து நிதியை கொண்டு வருவதாக குறிப்பிட்டார்கள்.ஆனால் இன்று அவற்றை மறந்து விட்டு பிரதான எதிர்க்கட்சியை முடக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.

பாராளுமன்றத்துக்குள்ளும், பாராளுமன்றத்துக்கு வெளியிலும் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் பெரும்பான்மை பலத்தை வைத்துக் கொண்டு மேற்கொள்கிறது. அரசாங்கத்தின் முறைகேடான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் போது அந்த முறைகேடுகள் குறித்து ஆராயாமல் முறைப்பாடுகளை முன்வைக்கும் தரப்பினர் இன்று இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.இதற்கு அரசாங்கம் தீவிர அவ தானம் செலுத்தியுள்ளது-என்றார். (அ)

# இறால் மறு ஏற்றுமதிக்கு புதிய தர நடைமுறைகள்

கொழும்பு, ஜுலை 18

இலங்கையில் இறால் ஏற்றுமதி தொழில்துறையில் எதிர்கொள்ளும் பல சவால்களுக்கு தீர்வுகளை வழங்குவதுடன் இறால் மீள் ஏற்றுமதி செய்வதற்கான புதிய மற்றும் விரிவான தர இயங்கும் நடைமுறையை மீன்பிடி மற்றும் மீன் வளங்கள் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கை பொருளாதாரத்திற்கு பெருந்தொகை அந்நிய செலாவணியை ஈட்டும் இறால் ஏற்றுமதி துறையை மேலும் வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

வெளிநாட்டுச் சந்தையில் இலங்கை இறாலுக்கு பெரும் தேவை இருந்த போதிலும், அண்மையில் உள்ளூர் நுகர்வு அதிகரித்துள்ளதுடன், உள்ளூர் உற்பத்தியில் சில வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஏற்றுமதி தேவையை பராமரிக்க கடந்த சில வருடங்களாக வெளிநாட்டு இறால் இறால் இறக்குமதி, மதிப்பு கூட்ட, மறு ஏற்றுமதி செய்ய அரசாங்கம் அனுமதித்தது.

வெளிநாட்டு இறால் தங்கள் தேவையை பாதிக்கும் தொற்று ஏற்படும் அபாயம் மற்றும் சில நாடுகளில் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கையில் ஏற்றுமதி வர்த்தகம் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடும் என அவர்கள் கருத்து தெரிவித்தனர். (அ)

# கெஹலிய குடும்பத்துக்கு எதிரான குற்றப்பத்திரிகை நீதிமன்றத்தில்!

கொழும்பு, ஜுலை 18

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் மருமகன் ஆகியோருக்கு எதிராக நிதி மோசடி குற்றச்சாட்டின் கீழ் நேற்று கொழும்பு மேல் நீதி மன்றத்தில் குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்பட்டன.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகைகள் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பின்னர் பிரதிவாதிகளை 50,000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அதைத் தொடர்ந்து, இவர்கள் அனைவருக்கும் வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப் பட்டதோடு, அவர்களின் கடவுச்சீட்டுகளைப் பறிமுதல் செய்யவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்காஜய ரத்ன உத்தரவிட்டார்.

மேலும், பிரதிவாதிகளின் கைவிரல் அடையாளங்களைப் பெற்று அறிக்கை பெறவும் உத்தரவிடப்பட்டது.

97 மில்லியனுக்கும் அதிகமான சொத்துக்களை சட்டவிரோதமாக சம்பாதித்ததற்காக, பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குறித்த பிரதிவாதிகளுக்கு எதிராக இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்துள்ளது. (அ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜுலை 18

பொலனறுவையில் அரலகங்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கஜூவத்த பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அரலகங்வில பொலிஸார் தெரிவித்தனர்.

அரலகங்வில பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய கெசல் பொத பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கெக்குலுவெவ பகுதியை சேர்ந்த 43 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அரலகங்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்ட மோ.சைக்கிளுடன் இளைஞன் கைது!

கொழும்பு, ஜுலை 18

போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிளுடன் இளைஞன் ஒருவர் களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் களுத்துறையில் பாணந்துறை தெற்கு - வேகட பாலத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபரான இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.சந்தேக நபரான இளைஞ னிடமிருந்து போலி இலக்கத்த கடு பொருத்தப்பட்ட மோட்டார்சைக்கிள், மற்று மொரு போலி இலக்கத்தகடு என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# நாக பாம்பு தீண்டி 4 வயது சிறுவன் பலி

கொழும்பு, ஜுலை 18

ஹங்குரன்கெத்த, உடகல உட பிரதேசத்தில் நாகப்பாம்பு தீண்டியதால் 4 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான் என தெரிவிக்கப்படுகிறது.

சிறுவனின் பெற்றோர் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவேளையில், அருகில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவனை நாகப்பாம்பு தீண்டியுள்ளது.

இதனால் சிறுவனின் காலில் ஏற்பட்ட காயத்துக்கு உடனடியாக கைவைத்தியம் செய்யப்பட்டது. எனினும், அது பலனளிக்காத காரணத்தால் பெற்றோர் ரிகிலகஸ்கட வைத்தியசாலையில் சிறுவனை அனுமதித்துள்ளனர். எனினும், சிகிச்சை பலனின்றி சிறுவன் வைத்தியசாலையில் உயிரிழந்தான் என தெரிவிக்கப்படுகிறது.

சிறுவனுக்கு அளிக்கப்பட்ட கைவைத்தியத்தின்போது விஷம் மேல் ஏறாமல் இருப்பதற்காக, இறுக்கமாக கட்டு போடப்பட்ட காரணத்தினால் இரத்த ஓட்டம் தடைப்பட்டிருக்கலாம் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

உரிய வேளையில் சரியான முறையில் சிகிச்சை வழங்கப்பட்டிருந்தால் சிறுவனைக் காப்பாற்றியிருக்க முடியும் என வைத்தியர்கள் தெரிவித்தனர். (அ)

# அமெரிக்காவின் வரியால் இறப்பர் துறைக்கும் பாதிப்பு

கொழும்பு, ஜுலை 18

இலங்கை மீது அமெரிக்கா விதித்த 30 சதவீத இறக்குமதி வரி, இறப்பர் துறைக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொழில்துறைகளுக்கு தேவையான ரயர்கள், கையுறைகள் மற்றும் இறப்பர் பொருட்களுக்கு இறப்பர் ஏற்றுமதித் துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளதாக கொழும்பு இறப்பர் வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் ஹரின் டி சில்வா தெரிவித்துள்ளார்.

30 சதவீத வரி என்பது ஏற்றுமதியாளர்களுக்கு போட்டித்தன்மையை பேணக்கூடிய ஒரு நிலையான தீர்வாகாது என அவர் கூறியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க வரியைக் குறைக்காவிடின் ஆடைத்துறை வீழ்ச்சியடையும் ஆபத்து

## ஐக்கிய தேசிய கட்சி எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 18

**அமெரிக்க ஜனாதிபதியினால் தீர்மானிக்கப்பட்டுள்ள 30 வீத தீர்வை வரி ஏற்கனவே எங்களுக்கு இருந்த வரியைவிட மூன்று மடங்கு அதிகரிப்பாகும். அதனால் இராஜதந்திர ரீதியில் செயற்பட்டு இதனை மேலும் குறைத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் எமது ஆடை உற்பத்தி தொழிற்சாலைகள் வீழ்ச்சியடையும் அபாயம் இருக்கிறது என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.**

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அமெரிக்க ஜனாபதியினால் எமக்கு அதிகரிக்கப்பட்டிருந்த 44 வீத தீர்வை வரியை 30 வீதமாக குறைத்துக்கொள்ள அரரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. அமெரிக்காவில் உள்ள இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மகிந்த சமரசிங்க, அவருக்கு இருக்கும் அனுபவம் மற்றும் தொடர்புகள் காரணமாகவே இந்தளவேனும் அரசாங்கத்துக்கு குறைத்துக்கொள்ள முடியுமாகி இருக்கிறது.

என்றாலும் இந்த தொகையும் எம்மை பொறுத்தவரை அதிகமாகும். ஏனெனில் எமக்கு அமெரிக்க சந்தைப்போட்டியாக இருக்கும் வியட்நாம், இந்தியா போன்ற நாடுகளுக்கு எம்மைவிட குறைந்த வரி தொகையே விதித்திருக்கிறது.

அத்துடன் அரசாங்கம் இந்த வரித் தொகையை மேலும் குறைத்துக்கொள்வதற்காக கலந்துரையாடுவதற்கு மீண்டும் ஒழுவொன்றை அமெரிக்காவுக்கு அனுப்ப தீர்மானித்திருக்கிறது.ஆனால் அமெரிக்காவில் யாருடன் கலந்துரையாடுவது என்று திட்டமிடலுடனே செல்லவேண்டும்.

அவ்வாறு இல்லாமல் அங்குள்ள வர்த்தக ஆணையாளர் போன்று சாதாரண அதிகாரிகளுடன் கலந்துரையாடி, எமது இலக்கை அடைந்துகொள்ள முடியும் என நாங்கள் நினைக்கவில்லை. இந்தியா இராஜதந்திர ரீதியில் செயற்பட்டே வரி குறைப்பை பெற்றுக் கொண்டுள்ளது. அவ்வாறான முறையொன்றையே அரசாங்கமும் கையாள வேண்டும்.

அதேநேரம் 30 வீத வரி என்பது ஏற்கனவே இருந்த வரியைவிட மூன்று மடங்கு அதிகமாகும். இவ்வாறான நிலையில் , நாங்கள் அமெரிக்காவுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யும் ஆடை உற்பத்திகளின் விலையும் மூன்று மடங்கு அதிகரிக்கும். தற்போது அமெரிக்க சந்தையில் எமது ரீசேர்ட் ஒன்று 100 டொலருக்கு விற்பனை செய்யப்படுமாக இருந்தால், இந்த வரி அதிகரிப்புக்கு பின்னர் அது 300 டொலர் வரை விலை அதிகரிக்கும் அவ்வாறான நிலையில் எமது ஆடை உற்பத்திகளின் கொள்வனவு குறையும். அப்போது ஏற்றுமதி வீதமும் குறைவடையும். இந்த நிலை தொடரும்போது ஆடை தொழிற்சாலைகளில் ஆடை உற்த்தியும் வீழ்ச்சியடையும். இறுதியில் தொழிலில்லாத பிரச்னை ஏற்படும். அமெரிக்காவுக்கான எமது ஏற்றுமதிகளில் நூற்றுக்கு 66 வீதம் ஆடை ஏற்றுமதியாகும்.

இது பாதிக்கப் பட்டால் எமக் கான டொலர் வருமானம் குறை வடையும். டொலர் வருமானம் குறைவ டையும் போது எமது கையிருப்பு குறைவடையும். கையிருப்பு குறைவடைந்தால், எமக்கு எரிபொருள், எரிவாயு என்பன கடனுக்கு பெற்றுக்கொள்ள முடியாமல் போகும்-என்றார்.

(அ)

# சாரதியின் கண்களில் மிளகாய் பொடி தூவி ஓட்டோ கொள்ளை!

கொழும்பு, ஜூலை 18

சாரதியின் கண்களில் மிளகாய் பொடியை தூவி ஓட்டோவைக் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் கொழும்பு கொட்டாவை நகரத்தில் இடம்பெற்றுள்ளதாக மொரகஹதென்ன பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கொட்டாவை நகரத்தில் பெண்ணொருவரும் இரண்டு ஆண்களும் கைக்குழந்தையுடன் தலகல பிரதேசத்துக்கு செல்வதற்காக ஓட்டோ ஒன்றில் வாடகைக்கு ஏறியுள்ளனர்.

பின்னர் ஓட்டோவில் இருந்த ஆண்கள் இருவரும் ஆள்நடமாட்டம் இல்லாத இடத்தில் வைத்து சாரதியின் கண்களில் மிளகாய் பொடியை தூவியுள்ளனர்.

சாரதி வலியில் துடித்துக் கொண்டிருக்கும் போது சந்தேக நபர்கள் மூவரும் சாரதியிடம் இருந்த கையடக்கத் தொலைபேசி, 11 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஓட்டோவைக் கொள்ளையிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சாரதி இது தொடர்பில் மொரகஹதென்ன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வது தொடர்பில் மொரகஹதென்ன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியாவில் கடும் பனிமூட்டம்

கொழும்பு, ஜூலை 18

நுவரெலியா உட்பட அதனை சூழவுள்ள பகுதிகளில் அதிகாலை முதல் மழையுடன் கடும் பனிமூட்டம் நிலவிவருகின்றது.

கடந்த சில நாட்களாகவே இந்நிலைமை காணப்படுகின்றது.

கடும் பனிமூட்டம் நிலவுவதால் சாரதிகள் நெருக்கடி நிலையை எதிர்கொண்டுள்ளனர். முன்னோக்கி செல்லும் வாகனங்களை உரிய வகையில் அவதானிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, சாரதிகள் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியா நகர எல்லை , ஹவாஎலிய, பொரலந்த , உடபுஸ்ஸல்லாவ பிரதான வீதி, நானுஓயா, தலவாக்கலை -ஹற்றன் பிரதான வீதி, நானுஓயா ரதல்ல குறுகிய வீதி போன்ற பகுதிகளில் இந்த அடர்ந்த பனிமூட்டம் மற்றும் வீதியில் போனிகல் குதிக்கும் அபாயம் உள்ளதால், மிகக் குறைந்த வேகத்தில் வாகனங்களை செலுத்துமாறும் நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# வீட்டின் பின்புறத்தில் இருந்த மனிதக் கால்!

கொழும்பு, ஜூலை 18

அம்பாந்தோட்டை , வலஸ்முல்ல, ரம்மல வராப்பிட்டிய ஹல்தொலகந்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் பின்புறத்தில் குழிதோண்டி புதைக்கப்பட்டிருந்த மனித கால் வலஸ்முல்ல பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட மனித கால் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் காணாமல்போன 51 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையின் காலாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையைக் கொலை செய்து சடலத்தை வீட்டின் பின்புறத்தில் புதைத்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவர் தினமும் தனது மனைவியுடன் தகராறில் ஈடுபடுவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஐந்து பிள்ளைகளின் தந்தையின் குடும்பத்தினர் வலஸ்முல்ல பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் வீட்டின் பின்புறத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் புதைக்கப்பட்டிருந்த மனித கால் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புதைக்கப்பட்டுள்ள சடலத்தின் மீதிப் பாகங்களை மீட்கும் பணிகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(அ)

# ஐந்தாண்டுகளில் 2000 மெகா வோல்ட் சூரிய மின் உற்பத்திக்கு எதிர்பார்ப்பு

## அமைச்சர் குமார ஜெயக்கொடி

கொழும்பு, ஜூலை 18

அடுத்த 5 வருடங்களில் நாம் 2000 மெகா வோல்ட் சூரிய சக்தி மின்சாரத்தினை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம் என்று வலுச்சுதி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்தார்.

சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பின் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியக் குழுவின் ஏழாவது மாநாட்டின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சூரிய சக்திப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கு நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். சூரிய சக்தியைப் பயன்படுத்துவதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டங்களும் எமக்குள்ளன. சூரியசக்தி தொடர்பில் எமது கொள்கையானது நிலையானது என்பதோடு பிராந்திய, சர்வதேச ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு தயாராகவுள்ளோம்.

சர்வதேச நாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதனால் தொழில்நுட்பத்தினை மேம்படுத்திக்கொள்வதோடு முதலீடுகளையும், நிதி உள்வருகைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

தொழில்வாய்ப்புக்களை மேம்படுத்தவும், புதிய சந்தை அனுகல்களை அடையவும் உள்நாட்டு கைத்தொழில்துறை மேம்பாட்டுக்கும் சூரியசக்தியால் நன்மைகள் உள்ள நிலையில் அது தொடர்பில் நாம் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம்.

இயற்கை வளங்களின் ஊடாக பெறப்படும் மின்சாரத்தின் மொத்த அளவில் 13 வீதமானது சூரிய சக்தியினால் பெறப்படும் மின்சாரமாக காணப்பபடுகிறது. அத்துடன் அடுத்த 5 வருடங்களில் நாம் 2,000 மெகா வோல்ட் சூரிய சக்தி மின்சாரத்தினை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம். அந்த இலக்கை நாம் விரைவாகவே அடைவோம் என்ற நம்பிக்கையும் உள்ளது-என்றார்.

# 1.3 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட போதை மாத்திரைகளுடன் ஐவர் கைது!

கொழும்பு, ஜூலை 18

கற்பிட்டி பகுதியில் மூன்று டிங்கி படகுகள் மற்றும் 1.3 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான சட்டவிரோத போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படையினர் நடத்திய சோதனை நடவடிக்கையின்போதே குறித்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளின் மொத்த பெறுமதி 1.3 மில்லியனுக்கும் அதிகம் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் தொடர்பில் 22 முதல் 44 வயதுக்குட்பட்ட சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்கள் முகத்துவாரம், குரக்கன்ஹேன, வன்னிமுந்தல், சின்ன குடியிருப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

(அ)

# போதைப்பொருளுடன் டென்மார்க் பெண் கைது!

கொழும்பு, ஜூலை 18

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 5.7 கிலோ கிராம் குஷ் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

23 வயதுடைய டென்மார்க்கைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஆவார்.

25 சிற்றுண்டிப் பொட்டலங்களில் சூட்சுமமாக மறைத்து போதைப்பொருளை இவர் கடத்த முற்பட்டதாக விமான நிலையத்தின் சுங்கப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் போதைப்பொருளை அவர் தாய்லாந்தில் இருந்து வாங்கியதாகவும், பின்னர் இந்தியா வழியாக நாட்டுக்கு வருகை தந்ததும் தெரியவந் துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது எதிரணி!

## அமைச்சர் விஜித ஹேரத்

"பல உதிரிகளாகப் பிரிந்து எதிரணிகள் வங்குரோத்து அடைந்துவிட்டன. வலுவான எதிரணியென தற்போது ஒன்றும் இல்லை."-என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு- மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி உரிய வகையில் நிறைவேற்றிவருகின்றார். அனைத்து உறுதிமொழிகளையும் 24 மணிநேரத்துக்குள் நிறைவேற்றிவிட முடியாது. கட்டம், கட்டமாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்கத்தின் பயணம் சாதகமாக உள்ளது. எதிரணிகள் வங்குரோத்தடைந்துள்ளன. அதனால்தான் எதையாவது கதைகளைக் கூறி அரசியல் நடத்துகின்றன.

மக்கள் பணத்தை கொள்ளையடித்தவர்களை முதலில் பிடிக்க வேண்டும். அதற்பிறகு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதன்பின்னரே பதுக்கப்பட்ட பணத்தை மீட்க முடியும்-என்றார். (அ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்:

# பிள்ளையான் குறித்த தகவல் விரைவில் நீதிமன்றத்துக்கு!

கொழும்பு, ஜூலை 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் என்ற விடயம் உட்பட விசாரணை தொடர்பான தகவல்கள் விரைவில் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு- உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையான் முன்கூட்டியே அறிந்திருந்தார் என பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது நான் கருத்து வெளியிட்டிருந்தேன். இதற்கமைய வெகு விரைவில் நீதிமன்றத்திடம் கருத்து முன்வைக்கப்படும்.

நீதிமன்றத்திடம் இவ்வாறு கருத்து முன்வைக்கப்பட்ட பின்னர், நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய அடுத்தகட்ட விசாரணையை முன்னெடுக்கும்.

தற்போதும் விசாரணை இடம்பெற்றுவருகிறது. எனினும், விசாரணைகள் மூலம் தெரியவந்த விடயங்களை நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்த வேண்டும். சில விசாரணைகள் தொடர்பில் ஊடகங்களிடம் தற்போது கருத்து வெளியிடமுடியாது -என்றார். (ஐ)

# தாதியர்களின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 18

இலங்கை தாதியர் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆட்சேர்ப்புக்கான வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்படவுள்ளன.

அதன்படி, 2020 முதல் 2022 ஆம் ஆண்டு வரை கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 2,650 பேரையும், தாதியர் பட்டம் பெற்ற 850 பட்டதாரிகளையும் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஹரி ஆனந்தசங்கரிக்கு கனடா பிரதமர் ஆதரவு

ஒட்டாவா, ஜூலை 18

கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி குறித்து சர்ச்சை அதிகரித்து வரும் நிலையில் கனேடிய பிரதமர் மார்க் கார்னி அவருக்கு தன் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவரின் குடியேற்றத்துக்கு ஹரி ஆனந்தசங்கரி முன்னர் ஆதரவு தெரிவித்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில் இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பிரதமர் மார்க் கார்னி, " குறித்த விடயம் தொடர்பில் ஹரி ஆனந்தசங்கரி வெளிப்படையாகச் செயற்பட்டார் எனவும், அவர் மீது தனக்கு முழு நம்பிக்கை உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம், கேரி ஆனந்த சங்கரி " தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் உலகத் தமிழர் இயக்கம் தொடர்பான எந்தவொரு தேசிய பாதுகாப்பு தீர்மானங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளமாட்டேன் எனத் தீர்மானித்து, அதற்கான நடவடிக்கைகளில் இருந்து விலகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# 2026 வரவு - செலவு திட்டம் கலந்துரையாடல் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 18

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பது தொடர்பான பூர்வாங்க திட்டமிடல், அபிவிருத்தி போக்குகள் தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதன்படி, எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பான தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதி நிதியமைச்சின் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அத்துடன், வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளைக் கோருவதற்கான சுற்றறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளதாகவும், அந்தந்த நிறுவனங்கள் தொடர்பான வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளை உரிய செலவின வரம்புகளுள் சமர்ப்பிப்பதற்கு எதிர்வரும் 31ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சின் அதிகாரிகள் ஜனாதிபதியிடம்



தெரிவித்தனர்.

எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தைத் திட்டமிடும் போது, நாட்டை தற்போதைய நிலையிலிருந்து மீட்டெடுக்க அவசியமான முக்கிய துறைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அத்துடன், வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டை வழங்கினால் மாத்திரம் போதாது. அந்த வேலைத் திட்டங்களின் பயன்கள் மக்களுக்கு கிடைக்கிறதா என்பதை ஆராய்ந்து அதற்குத் தேவையான பொறிமுறைகளை பலப்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருந்தார். (ஐ)

# தோல் நோய்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 18

நாட்டில் பரவலாக தோல் தொடர்பான நோய்கள் அதிகரித்து வருவதாகச் சுகாதார மேம்பாட்டு பணியகம் எச்சரித்துள்ளது.

ரிங்வோர்ம் என்ற பூஞ்சை தோல் நோய் பரவி வருவதாக தோல் நோய் மருத்துவர் ஜனக அகரவிட்ட தெரிவித்துள்ளார்.

இந்த நோய் ஏற்பட்டால், தோலில் சிவப்பு, வட்ட வடிவ தடிப்புகள் தோன்றும் எனவும், தோல் தொடர்பு அல்லது ஆடைகள் போன்றவற்றின் ஊடாக இந்த நோய் பரவுவதாகவும், இந்த நோய் காரணமாகத் தோல் சிதைவு, வறட்சி, சிவத்தல், அரிப்பு, எரிதல் மற்றும் ஒட்டும் தன்மை போன்ற பாதிப்புக்கள் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாட்டில் அரசால், பதிவு செய்யப்படாத பூச்சுக்கள் அல்லது உரிய ஆய்வக விபரங்கள் இல்லாத தயாரிப்புகளைப் பயன்படுத்துவது தொடர்பில் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# இலத்திரனியல் அடையாள அட்டை தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜூலை 18

இலத்திரனியல் அடையாள அட்டைக்கு பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிடவேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இலத்திரனியல் அடையாள அட்டையின் தரவுகள் முழுமையாக இந்திய நிறுவனத்தால் 3 ஆண்டுகள் நிர்வகிக்கப்படும் என கேள்வி ஆவணத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.அதனை தொடர்ந்தே ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு ஒப்படைக் கப்படும்.

இந்திய நிறுவனம் மென் மற்றும் வன்பொருட்கள் அனைத்தையும் தாமே முழுமையாக கையாள்வதால் பின்புறத்தில் உள்ள தரவுகளை அவர்கள் தொடர்ந்து அணுகும் அபாயம் உள்ளது.

தரவுகள் வியாபாரமாக மாறிய உலகில், இத்தகைய முக்கியமான தேசிய தகவல்களை வெளிநாட்டு நிறுவனத்திடம் ஒப்படைப்பது தேசிய பாதுகாப்புக்கே எதிராக விடயமாக அமையும். அநுரகுமார திசநாயக்க முன்னர் எதிர்க்கட்சியில் இருந்தபோது, இத்திட்டத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். ஆனால் இப்போது அதே திட்டத்திற்கு ஆதரவை வெளியிடுகின்றார்.

5.5 பில்லியன் ரூபாய் வரை இலங்கை அரசால் (மக்களின் வரி பணத்தில்) ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப ஆட்பதிவுத் திணைக்களம் தற்போதுள்ள தொழில்நுட்பங்கள் அனைத் தையும் உருவாக்கி முடித்து விட்டது.எனவே இந்திய நிறுவனத்திற்கு இதை ஒப்படைப்பது தேவையற்றது, மேலும் இந்திய அரசால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனம் இத்திட்டத்தில் ஈடுபடுவது மிகுந்த அபாயகரமானதாகும்.

இந்த திட்டம் ஒரு இலத்திரனியல் அடையாள அட்டை திட்டம் மட்டும் அல்ல, இது தேசிய பாதுகாப்பு திட்டம் என குறிப்பிடப்படுகிறது.பொது மக்கள் தங்களின் தனிப்பட்ட தரவுகளை இந்திய நிறுவனத்துக்கு வழங்கக்கூடாது.இலத்திரனியல் அடையாள அட்டையைப் பெறாமல் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும். இந்த திட்டத்துக்கு எதிராக அனைத்து குடிமக்கள் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்ற அழைப்பை விடுக்க விரும்புகின்றோம்-என் றார். (அ)

# சட்டத்தின் ஆட்சியை மீறி செயல்படுகின்றது அரசு!

## சஞ்சீவ எதிரிமான்ன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 18

அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அதிகாரத்திற்காக சட்டத்தின் ஆட்சியை மீறி செயற்படுவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் உள்ளூராட்சிமன் றத் தேர்தலின் அதிகாரத்தை நிலைநாட்டுவதில் முழுமையான அரசியல், பணம் மற்றும் தமது அதிகார பலத்தை உபயோகித்தது.

எங்கள் கட்சி அதிகாரம் பெறவில்லை என்றால் அந்த உள்ளூராட்சி மன்றத்திற்கு நிதி வழங்கப்படாது எனக் கூறி மக்களாட்சி மீது நேரடி அச்சுறுத்தலை ஜனாதிபதி விடுத்த மையையும் நாம் காண முடிந்தது.

அதேபோன்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தேர்தல் பிரசாரம் முடிவடையும் நாட்களை மீறி பிரசாரத்தைத் தொடருமாறு கூறி சட்டத்தின் ஆட்சிக்கு ஒரு அச்சுறுத்தலை விடுத்த சம்பவமும் பதிவாகியிருந்தது.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டவர்கள் கடத்தப்படல் வீட்டில் துப்பாக்கிச்சூடு, கொலை மிரட்டல் உள்ளிட்ட விடயங்கள் வெலிகம உள்ளூராட்சி மன்றத்தின் ஆட்சியை கைப்பற்றுவதற்காக அரங்கேறியது. ஆனால் தேர்தல் சட்ட மீறல்களுக்கான முறைப்பாடுகள் குறித்து இதுவரை விசாரணை கூட செய்யப்படவில்லை.

"நாங்கள் ஒழுக்கத்தை கட்டமைக்கிறோம்" என்று கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்தவர்கள் அதே ஒழுக்கத்தை மீறுகின்றனர்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “கிழக்கிலும் மனித புதைகுழிகளை அரசாங்கம் தோண்ட வேண்டும்”

மட்டக்களப்பு, ஜூலை 18

**வடக்கில் இடம்பெறுவது போன்று கிழக்கிலும் பல மனிதப் புதைகுழிகளை அரசாங்கம் தோண்ட வேண்டும் என்று நாம் தமிழர் சமூகசேவை ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.**

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கோபாலன் பிரசாத் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார். அவர் மேலும் கூறுகையில்,

“யாழ்ப்பாணம் செம்மணியில் இடம்பெற்ற படுகொலை தொடர்பில் அரசின் கவனம் திரும்பியிருக்கின்றது. தோண்ட தோண்ட வெளிவரும் பச்சிளம் பாலகர்களின் மண்டை ஓடுகள், எலும்புக்கூடுகளும், அதிகமான உடல்கள் இருப்பதாகவும், புதைக்கப்பட்டிருப்பதாகவும், தோண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வடமாகாணத்திலே தமிழர்களின் ஆதரவைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் குறிப்பாக மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்த அரசாங்கம் இருக்கின்றது. இந்த நிலையில் செம்மணி மனிதப் புதைகுழி விடயம் கவனம் செலுத்தப்பட்டு கொண்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்கது. இதற்கு நிச்சயமாக நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

இவற்றைப்போல் கிழக்கிலும் இன்றும் கண்டுகொள்ளப்படாத படுகொலைகள், தோண்டப்பட வேண்டிய பல மனிதப் புதைகுழிகள் உள்ளன. அவற்றுக்கு நீதியை வேண்டித்தான் எமது நாம் தமிழர் சமூக சேவை ஒன்றியம் இந்தச் சந்திப்பை நடத்துகின்றோம்.


குறிப்பாக 1990, 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முஸ்லிம் ஜிகாத் எனும் அமைப்பால் பல படுகொலைகள் திட்டமிட்டு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த செய்தியை சர்வதேசத்துக்கும் தேசிய அரசாங்கத்துக்கும் கொண்டு செல்வதற்காகவே நாம் இந்த ஊடக சந்திப்பை மேற்கொண்டோம்.

குறிப்பாக 20.06.1990 ஆம் ஆண்டு வீரமுனை பிள்ளையார் கோவிலில் 60 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அதேபோன்று 05.07.1990 ஆம் ஆண்டு வீரமுனையில் 13 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 10. 07. 1990 ஆம் ஆண்டு வீரமுனையில் 15 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

16.07.1990 ஆம் ஆண்டு மல்வத்தை இராணுவத்தினரும் முஸ்லிம் ஊர்காவல் படையினருமாக 30 பேர், 8 தமிழ்ப் பெண்களை பாலியல் வன்புணர்வு செய்து படுகொலை செய்தனர்.

அதேபோன்று 26.07.1990ஆம் ஆண்டு வீரமுனையில் 23 சிறுவர்கள் உட்பட 32 இளைஞர்கள் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் மிகவும் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார். (எ)



# வெருகல் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

வெருகல், ஜூலை 18

திருகோணமலை மாவட்ட வெருகல் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் வெளிவிவகார - வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திர தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சண்முகம் குகதாசன், இம்ரான் மஹ்ரூப் உள்ளிட்ட வெருகல் பிரதேச சபை தவிசாளர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் திணைக்களத் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதில் காணி பிரச்னைகள் மற்றும் வீதி உட்கட்டமைப்பு வசதி உட்பட எதிர்கால அபிவிருத்தி தொடர்பிலும் பொதுவான மக்கள் பிரச்னைகளும் கலந்துரையாடப்பட்டன. (எ)



# மாணவிக்கு கௌரவிப்பு

நற்பிட்டிமுனை, ஜூலை 18

அம்பாறை மாவட்டம் நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலய மாணவி முஹம்மட் நிஸ்பர் பாத்திமா அனாபாவின் வரலாற்றுச் சாதனையை பாராட்டும் முகமாக நேற்று முன்தினம் கௌரவிப்பு நடைபெற்றது.

குறித்த மாணவி அண்மையில் வெளியான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக 9ஏ சித்திகளை பெற்றிருந்தார். (எ)

# இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகளால் இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தல்

சாய்ந்தமருது, ஜூலை 18

இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோதமான விடயங்களைத் தடுக்காவிடின் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை இலங்கை எதிர்கொள்ளும் என நீதிக்கான மையத்தின் தலைவர் ஷபி எச். இஸ்மாயில் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக இலங்கையில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளால் ஏற்படும் விடயங்கள் குறித்து அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் உள்ள நீதிக்கான மையத்தின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும்




தெரிவிக்கையில்,

இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளால் இலங்கைக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதாவது சபாத் ஹவூஸ் என்ற பெயரில் மதத்தை பரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நிர்மாணம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கம் ஒரு மெத்தன போக்கில் உள்ளதை காண முடிகின்றது.எனவே தான் உடனடியாக இந்த விடயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்- என்றார். (எ-01)

# அம்பாறையில் கடற்றொழில் ஒருங்கிணைப்பு குழு கூட்டம்



கல்முனை, ஜூலை 18

அம்பாறை மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூட மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேயவிக்கிரமவின் ஏற்பாட்டில் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே நெறிப்படுத்தலில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது நாவிதன்வெளி பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடி குளங்களை தூர்வார்வது தொடர்பாகவும் கிட்டங்கி, நாவிதன்வெளி, அன்னமலை, சொறிக்கல்முனை, குடியிருப்புமுனை போன்ற பகுதிகளில் மீன்பிடிக்கு இடையூறாக அமைந்துள்ள சல்பீனியாவை அகற்றுவது தொடர்பாகவும் நன்னீர் மீனவர்களுக்கு இறங்கு துறைகளை அமைப்பது தொடர்பாகவும் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கவீந்திரன் கோடீஸ்வரன், எஸ். உதுமாலெப்பை, எஸ். அப்துல் பாசித், அபூபக்கர் ஆதம்பாவா, மஞ்சுல சுகத் ரத்நாயக்க, உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (எ-01)

# மாகாண மட்ட போட்டியில் அல்-அஷ்ரக் அணி சம்பியன்




நிந்தவூர், ஜூலை 18

நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் 18 வயது பூப்பந்து அணி மாகாண மட்ட சம்பியனானது.

திருகோணமலை மக்கேசர் உள்ளக அரங்கில் 15ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பூப்பந்து போட்டி நடைபெற்றது. இதில், கல்முனை கல்வி வலய நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலையின் 18 வயது ஆண்கள் பிரிவு பூப்பந்து அணியினர் கலந்து கொண்டு இறுதிப் போட்டியில் கல்முனை ஸாகிறா கல்லூரியை வீழ்த்தி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு தங்கப்பதக்கத்தை சுவீகரித்து தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் கிராம மக்கள்மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு!

## 20 பேர் பலி, வீடுகளுக்கு தீ வைப்பு

அபுஜா, ஜூலை 18

**நைஜீரியாவில் கிராம மக்கள் மீது மர்ம நபர்கள் நடத்திய திடீர் துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் உயிரிழந்தனர்.**

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்த நாட்டில் ஐ. எஸ். ஐ. எஸ்., அல் கொய்தா, போகோ ஹராம் போன்ற பயங்கரவாத அமைப்புகளும் பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

இதேபோல் கொள்ளை, கொலை, பணத்துக்காக பொது மக்கள், குழந்தைகள், கால்நடைகளை கடத்தும் செயலில் ஈடுபடும் "பண்டிட்ஸ்"என்ற கடத்தல் கும்பல்களும் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்கள் பொதுமக்கள், படையினரை குறிவைத்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. அந்த நாட்டின் பல்வேறு மாகாணங்களில் விவசாயிகளுக்கும் கால்நடை பராமரிப்பாளர்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் நடைபெற்று வருகிறது. இதனால், உயிரிழப்பு சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில், நைஜீரியாவின் பிளெட்டுவா மாகாணம் ரியாம் நகரின் டாகோஸ் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் இரவு புகுந்த மர்ம நபர்கள் உறங்கிக்கொண்டிருந்த மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த சம்பவத்தில் 20 பேர் உயிரிழந்தனர். மேலும், வீடுகளையும் தீ வைத்து எரித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்க வில்லை. (ஏ)

# பாதுகாப்பு அமைப்பு சோதனை வெற்றி



புதுடில்லி, ஜூலை 18

முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஆகாஷ் பிரைம் ஏவுகணை நேற்று முன்தினம் பரிசோதித்து பார்க்கப்பட்டது.

இலக்குகளை வானிலேயே தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட இந்த ஆகாஷ் பிரைம் சோதனை லடாக்கில் வெற்றிகரமாக நடைபெற்றது.

சோதனையின் போது இலக்குகளை துல்லியமாக ஆகாஷ் பிரைம் வான் பாதுகாப்பு அமைப்பு அழித்ததாகவும், சவாலான தட்பவெப்ப நிலையிலும் திறம்பட செயல்படும் வகையில் இந்த சிஷ்ரம் வடிவமைக்கப்பட்டு இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த ஆகாஷ் பிரைம் வான் பாதுகாப்பு அமைப்பை 4,500 மீற்றர் உயரத்தில் நிலைநிறுத்த முடியும் மற்றும் சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலக்குகளை தாக்கும் வல்லமை கொண்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# வெள்ளப்பெருக்கில் சிக்கி பாகிஸ்தானில் 125 பேர் பலி

இஸ்லாமாபாத், ஜூலை 18

பாகிஸ்தானில் கனமழை, வெள்ளப்பெருக்கில் சிக்கி இதுவரை 125 பேர் பலியாகினர்.


பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவி வருகிறது.

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக பருவமழை தீவிரமடைந்து வருகிறது. குறிப்பாக பஞ்சாப், கைபர் பக்துவா, சிந்து, பலூசிஸ்தான் உள்ளிட்ட மாகாணங்களில் கனமழை பெய்து வருகிறது.

இதனால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளக்காடாக மாறின. இதில் 3 வீடுகள் இடிந்து விழுந்தன. எனவே கட்டட இடிபாடு மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி சுமார் 116 பேர் பலியாகி யிருந்தனர். 150இற்கும் மேற்பட்டோருக்கு படுகாயம் ஏற்பட்டது. அவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் சிகிச்சை பலனின்றி மேலும் 8 பேர் பலியாகினர். இதனால் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 125 ஆக அதிகரித்தது.

கனமழையால் வீடுகளை இழந்த பலரும் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பருவமழை தீவிரமடைந்து வரும் நிலையில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவி வருகிறது. (ஏ)

# கோவா மாநில ஆளுநராக அரசரின் மகன் தெரிவு



கோவா, ஜூலை 18

கோவா மாநிலத்தின் ஆளுநராக அரசரின் மகன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த புசபாட்டி அசோக் கஜபதி ராஜூ தெலுங்கு தேசம் கட்சியை சேர்ந்தவராவார். விஜயநகரத்தின் கடைசி அரசரான புசபாட்டி விஜயராம கஜபதி ராஜூவின் மகன் அசோக் கஜபதி ராஜூ. விஜயராம கஜபதி ராஜூவும், இவரது சகோதரர் ஆனந்த கஜபதி ராஜூவும் பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்துள்ளனர்.

அரச பரம்பரையை சேர்ந்த அசோக் கஜபதி ராஜூ சென்னையில் பிறந்தவர். முதலில் இவர் 1978இல் ஜனதா கட்சி வேட்பாளராக விஜயநகரம் சட்டப்பேரவைத் தொகுதியில் வெற்றி பெற்றார்.

இதன் பின்னர் இவர் தெலுங்கு தேசம் கட்சியில் இணைந்து *1983, 1985, 1989, 1994, 1999* மற்றும் 2009ஆம் ஆண்டு வரை தொடர்ந்து சட்டப்பேரவை உறுப்பினராக வெற்றி பெற்றார். இதன் பின்னர் இவர், 2014ஆம் ஆண்டு விஜயநகரம் பாராளுமன்ற தொகுதியில் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அப்போது அவர் மத்திய விமான போக்குவரத்து அமைச்சராக பதவி வகித்தார். இதற்கு முன்பு, ஆந்திர மாநில கலால், வணிகவரி, நிதி, வருவாய்த்துறைகளுக்கான அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். சிம்மாசலம் நரசிம்மர் கோவிலின் நிரந்தர தர்மகர்த்தாவான இவர், பல்வேறு பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளையும் நடத்தி வருகிறார். அரச பரம்பரையை சேர்ந்த அசோக் கஜபதி ராஜூவை தற்போது கோவா மாநில ஆளுநராக நியமிப்பதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் இறக்குமதி

# இந்தியா, சீனாவுக்கு 100 வீதம் வரிவிதிப்பு

வாஷிங்டன், ஜூலை 18

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் சீனா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் அடுத்தகட்டமாக 100 சதவீதம் வரியை சந்திக்க வேண்டியிருக்கும் என நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளர் மார்க் ரூட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் இடையே யான போரை நிறுத்தும் முயற்சியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார். ஆனால், ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரைன் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருவது. ட்ரம்ப்பை அதிருப்தி அடையச் செய்துள்ளது.

இதனால் அடுத்த 50 நாட்களுக்குள் உக்ரைனுடன் போர் நிறுத்தம் செய்யவில்லை என்றால், ரஷ்யாவுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார். மேலும், ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படும் நாடுகளுக்கும் அபராதம் விதிக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



இந்த நிலையில், நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளர் மார்க் ரூட், அமெரிக்க செனட் உறுப்பினர்களை சந்தித்துப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

பிரேசில், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் ரஷ்யாவுடன் தொடர்ந்து வர்த்தகம் செய்கின்றன. 50 நாட்களுக்குள் ரஷ்யா போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொள்ளவில்லை என்றால், அந்த நாடுகளுக்கு 100 சதவீதம் வரி விதிக்கப்படும்.

மேலும், 50 நாட்களுக்குள் போர் நிறுத்தம் ஏற்படாவிட்டால், அடுத்ததாக ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யும் பிரேசில், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் 100 சதவீத வரி விதிப்பை சந்திக்க நேரிடலாம். எனவே, இந்த நாடுகளின் தலைவர்கள் புடினிடம், உக்ரைனுடன் போர் நிறுத்தம் செய்யுமாறு வலியுறுத்த வேண்டும். இல்லை என்றால் ரஷ்யா சந்திக்கும் பாதிப்பை, அதனுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளும் மிகப் பெரிய அளவில் சந்திக்க நேரிடும்- என்றார். (ஏ)

# ஈரான் பயணத்தை தவிர்க்குமாறு இந்தியத் தூதரகம் அறிவுறுத்தல்

தெஹ்ரான், ஜூலை 18

அத்தியாவசியமற்ற ஈரான் பயணத்தை தவிர்க்குமாறு அந்த நாட்டில் உள்ள இந்தியத் தூதரகம் இந்தியர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் ஈரானில் உள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஈரானுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதற்கு முன், கடந்த பல வாரங்களாக ஈரானில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான அம்சங்களைக் கருத்தில் கொள்ளுமாறும், சூழ்நிலையை கவனமாக பரிசீலிக்குமாறும் இந்தியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஈரானில் என்ன நடக்கிறது என்பதை தொடர்ந்து கண்காணிப்பதோடு, இந்திய அதிகாரிகள் வழங்கிய சமீபத்திய ஆலோசனைகளை பின்பற்றுமாறும் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஏற்கனவே ஈரானில் உள்ள இந்தியர்கள், இங்கிருந்து வெளியேற விரும்பினால் தற்போது கிடைக்கும் வணிக விமான சேவை மற்றும் கப்பல் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்." என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## சிரியா இராணுவ தலைமையகம் மீது இஸ்ரேல் இராணுவம் அதிரடி தாக்குதல்

டமாஸ்கஸ், ஜூலை 18

சிரியா இராணுவத் தலைமையகம் மீது இஸ்ரேல் இராணுவம் அதிரடித் தாக்குதல் நடத்தியுள்ளது.

சிரியாவில் அல் ஆஷாத் தலைமையிலான அரசு கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கவிழ்ந்தது. ஜனாதிபதியாக இருந்த அல் ஆஷாத் ரஷ்யாவுக்கு தப்பிச் சென்றார். இதையடுத்து சிரியாவில் ஆட்சியை கைப்பற்றிய ஹயத் தஹிர் அல் ஷியாம் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

இந்த நிலையில், சிரியாவின் இராணுவத் தலைமையகம் மீது இஸ்ரேல் இராணுவம் நேற்று முன்தினம் அதிரடித் தாக்குதல் நடத்தியது. டமாஸ்கஸில் உள்ள சிரியா இராணுவ தலைமையக கட்டடம் மீது இஸ்ரேல் விமானப்படை ஏவுகணை, குண்டு வீச்சு தாக்குதல் நடத்தியது.

சிரியாவின் ஸ்விடா மாகாணத்தில் வாழும் ட்ரூஸ் மதத்தினருக்கு ஆதரவாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. சிரியாவில் வாழும் ட்ரூஸ்களை சிரியா பாதுகாக்கவில்லையென்றால் அரசு படைத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் இஸ்ரேல் மிரட்டல் விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 8 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அபார வெற்றி

## ரி - 20 தொடரை இழந்தது இலங்கை

கொழும்பு, ஜுலை 18

இலங்கைக்கு எதிரான மூன்றாவது ரி - 20 போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடரையும் 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ரி - 20 கிரிக்கெட் போட்டி கொழும்பில் உள்ள பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. 20 ஓவர்களில் இலங்கை அணி 7 விக்கெட்கள் இழப்புக்கு 132 ஓட்டங்களில் கட்டுப்படுத்தப்பட்டது. தொடக்க ஆட்டக்காரர் பதும் நிஸ்ஸங்கா 46 ஓட்டங்களும் தசுன் ஷானக ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களும் எடுத்தனர். பங்களாதேஷ் தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் மெஹிதி ஹசன் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதைத்தொடர்ந்து 133 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் விளையாடிய பங்களாதேஷ் அணி 16. 3 ஓவர்களில் 2 விக்கெட்கள் மட்டும் இழந்து 133 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில்



அபார வெற்றி பெற்றது. 5ஆவது அரைச்சதம் அடித்த தன்சித் ஹசன் 73 ஓட்டங்களுடனும் தவ்ஹித் ஹிரிடாய் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

(எ)


## அதிரடி மன்னன் ரஸல் ஓய்வு

ஜமைக்கா, ஜுலை 18

மேற்கு இந்திய தீவுகள் அணியின் நட்சத்திர வீரர் அண்ட்ரே ரஸல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 37 வயதான ரஸல், அடுத்து நடைபெறவுள்ள அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் முதல் இரண்டு போட்டிகளுடன், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இதுவரை ஒரு டெஸ்ட், 56 ஒருநாள் போட்டிகள் மற்றும் 84 ரி - 20 போட்டிகளில் மேற்கு இந்திய தீவுகள் அணிக்காக ரஸல் விளையாடியுள்ளார். 84 ரி - 20 போட்டிகளில் விளையாடியுள்ள ரஸல் 1,078 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 61 விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார்,

56 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள ரஸல் 1,034 ஓட்டங்கள் எடுத்து, 70 விக்கெட்களை வீழ்த்தியுள்ளார். மேற்கு இந்திய தீவுகள் அணி 2012 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரி - 20 உலகக் கிண்ணத்தை கைப்பற்ற ரஸல் முக்கிய பங்கு வகித்தார். (எ)



## இங்கிலாந்துக்கு அபராதம் ஐ. சி. சி. மீது குற்றச்சாட்டு

லண்டன், ஜுலை 18

இந்திய அணிக்கு சாதகமாக ஐ. சி. சி. செயல்படுவதாக இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் வோகன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி கடந்த 10ஆம் திகதி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் தொடங்கியது. இதில் இங்கிலாந்து 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் இங்கிலாந்து அணி வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பந்து வீச அதிக நேரம் எடுத்துக்கொண்ட காரணத்தால் போட்டி கட்டணத்தில் 10 சதவீதம் இங்கிலாந்து அணி வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் 2 புள்ளிகள் இங்கிலாந்து அணிக்கு குறைக்கப்பட்டுள்ளது.


இது தொடர்பில் மைக்கல் வோகன் கடும் கண்டனம்



தெரிவித்துள்ளார்.

"நான் நேர்மையாக ஒரு விடயத்தைக் கேட்க விரும்புகின்றேன். லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இரண்டு அணிகளுமே ஓவர்களைக் குறைவாக வீசின. இந்த விடயத்தில் இரண்டு அணிகளுமே தவறு செய்தன. ஆனால், ஓர் அணிக்கு மட்டும் தற்போது அபராதம் விதிக்கப்பட்டிருப்பதை என்னால் நம்பவே முடியவில்லை"- என்றார்.

(எ)



## இந்தியாவின் சிந்து அதிர்ச்சி தோல்வி

ரோக்கியோ, ஜுலை 18

ஜப்பான் ஓபின் பட்மிண்டன் தொடரில் பி. வி. சிந்து அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

மொத்தம் 28.95 கோடி ரூபாய் ( இலங்கை மதிப்பில்) பரிசுத்தொகைக்கான ஜப்பான் ஓபின் சர்வதேச பட்மிண்டன் போட்டி ரோக்கியோவில் நடைபெற்று வருகிறது. இதில், மகளிர் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை பி. வி. சிந்து, தென்கொரியாவின் சிம் யு ஜின்னுடம் மோதினார்.

இந்த ஆட்டத்தில் 15-21, 14-21 என்ற நேர் செற்றில் சிம் யு ஜின்னிடம் தோற்று பி. வி. சிந்து தொடரிலிருந்து வெளியேறினார். இந்த ஆண்டில் பி.வி. சிந்து முதல் சுற்றுடன் வெளியேறுவது இது 5ஆவது முறையாகும். (எ)



முத்தரப்பு தொடர்

## தென்னாபிரிக்காவை வீழ்த்தி நியூசிலாந்து அசத்தல் வெற்றி

ஹராரே, ஜுலை 18

முத்தரப்பு தொடரில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

சிம்பாவே, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய 3 நாடுகள் இடையிலான முத்தரப்பு ரி - 20 கிரிக்கெட் தொடர் சிம்பாவேயின் ஹராரே நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா இரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது லீக் ஆட்டத்தில் மிட்செல் சாண்ட்னெர் தலைமையிலான நியூசிலாந்து அணி, வான்டெர் டஸன் தலைமையிலான தென்னாபிரிக்காவை எதிர்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 173 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக ரிம் ரொபின்சன் 75 ஓட்டங்களும் பெவோன் ஜேக்கப்ஸ் 44 ஓட்டங்களும் எடுத்தனர். தென்னாபிரிக்கா தரப்பில் க்வேனா மபாகா 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதனையடுத்து களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 18. 3 ஓவரில் 152 ஓட்டங்கள் எடுத்து சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி, ஜேக்கப் டபி தலா 3 விக்கெட்களை கைப்பற்றினார். இதனால் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் நியூசிலாந்து அணி முதல் இடத்திலும் தென்னாபிரிக்கா 2ஆவது இடத்திலும் உள்ளது. (எ)



## ஐ.சி.சி. தரவரிசையில் ஜோ ரூட் முதலிடம்

டுபாய், ஜுலை 18

ஐ.சி.சி. கிரிக்கெட் வீரர்கள் தரவரிசைப் பட்டியலில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. பரபரப்பான இந்த போட்டியில் இங்கிலாந்து 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த போட்டியில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் முதல் இன்னிங்ஸில் சதம் விளாசினார். மேலும், 2ஆவது இன்னிங்ஸிலும் 40 ஓட்டங்கள் சேர்த்தார்.

இந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) வெளியிட்டுள்ள டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் தரவரிசைப் பட்டியலில் சக நாட்டு வீரர் ஹாரி புரூக்கை பின்னுக்குத் தள்ளி ஜோ ரூட் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். நியூசிலாந்து வீரர் கேன் வில்லியம்சன் 2ஆவது இடத்திலும் இங்கிலாந்து வீரர் ஹாரி புரூக் 3ஆவது இடத்திலும் உள்ளனர். இந்திய வீரர்கள் யஷஸ்வி ஜெய்ஸ்வால், ரிஷப் பண்ட், சுப்மன் கில் ஆகியோர் முறையே 5, 8, 9ஆவது இடங்களைப் பிடித்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளையில்...

14ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அன்றைய தினமே அவர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மூளையில் இரத்த கட்டி இருந்தமை தெரிய வந்தது. இதையடுத்து, மறுநாளே அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எனினும், அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அவரின் மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக உடல்கூராய்வு பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பிமல்...

மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு கடந்த மாதம் 2 ஆம் திகதி முறைப்பாடளித்தோம். ஆனால், இதுவரையில் அந்த முறைப்பாடு குறித்து எந்த விசாரணையும் நடக்கவில்லை.

துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்கா, பிரதி அமைச்சர் ஜனித் ருவான் கொடித்துவக்கு ஆகியோர் இந்த கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் தாம் நன்கு அறிவோம் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டார்கள். ஆனால், ஜனாதிபதி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு அறிக்கை சமர்ப்பித்த பின்னர் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கருத்துக்கு மாறாக தற்போது பேசுகிறார்கள்.

துறைமுக அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் பணிப்புக்கு அமைவாகவே இந்த 323 கொள்கலன்களும் விடுவிக்கப்பட்டன என்று சுங்கத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் சீவலி அருகொட குறிப்பிட்டார். இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு முறையாக செயல்படுமாயின் பிமல் ரத்நாயக்கவை கைது செய்து விசாரணை நடத்தியிருக்க வேண்டும். பழைய திருடர்களை பிடிப்பதில் அந்த ஆணைக்குழுவுக்கு வேலை பளுவாக இருப்பதால் புதிய திருடர்களை ஆணைக்குழு அலட்சியம் செய்கிறது.

இந்த அரசாங்கத்தில் ஆளும் தரப்பின் உறுப்பினர்களுக்கு சட்ட விலக்களிக்கப்பட்டுள்ளது. கொட்டாஞ்சேனை பாடசாலை மாணவியின் உயிரிழப்பு தொடர்பில் அந்த மாணவியின் தாயார் தேசிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர் மீது குற்றச்சாட்டை முன்வைத்தார். அவரைக் கைது செய்து விசாரணைகள் ஏதும் மேற்கொள்ளப்படவிலலை. மாறாக அந்த நபருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

வீடு கொள்வனவு விவகாரத்தில் அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவரை கைது செய்யுமாறு கல்கிசை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலும் இதுவரையில் அவர் கைது செய்யப்படவில்லை.

முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேனவின் சகோதரருக்கு எதிராக 2021ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை அமைச்சர் ஒருவர் கைது செய்யப்பட்டு பல மாதங்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ஆகவே, ஊழல் ஒழிப்புக்கு எதிரான செயல்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்குமாயின் தமது அரசாங்கத்தின் ஊழல்வாதிகளுக்கு எதிராக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## அரசுக்கு...

தொடர்ச்சியான வழிகாட்டல்களை எதிர்பார்க்கிறேன். தேசிய, மத மற்றும் சமூக மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை பின்வாங்காமல் செயல்படுத்துகிறேன் - என்று கூறினார்.

மேலும், பௌத்த சாசன ரீதியாக நிலவும் பல்வேறு சவால்கள் மற்றும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை உடனடியாகத் தயாரிக்குமாறும் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தாம் பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

## 80 சதவீத...

ஆடைகள், விவசாயத்துறை தொடர்பான 42 பொருட்கள் இவ்வாறு வரி இல்லாமல் அனுமதிக்கப்படும் என்று பொருளா தார அபிவிருத்திக்கான இணை அமைச் சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

“இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக பேச்சுகளின்போதே இந்த சலுகை கிடைத்துள்ளது. விவாதங்கள் இன்னும் நடந்து கொண்டிருப்பதால், வேறு விடயங்களை பகிரங்கமாக வெளியிட முடியாது. இந்த விடயங்கள் தொழில்நுட்ப ரீதியாகவும் - உணர்திறன் மிக்கதாகவும் உள்ளன. இந்த சலுகை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும் பேச்சுகள் இறுதி செய் யப்பட்ட பின்னரே சாத்தியமான ஒப்பந்தத்தின் முழு விவரங்களும் பகிரப்படும்”, என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## தனிநபர்...

நேற்றைய கூட்டத்தில் பல தீர்க்க மான விடயங்களுக்கு தீர்வு எட்டப்படாத நிலை யில் வடக்கு மாகாணத்தில் நிலவும் சில பதவி வெற்றிடங்களுக்கு ஆளணியை நிரப்புவது குறித்து முடிவு எட்டப்பட் டது. குறிப்பாக, தொழில்நுட்ப உத்தி யோகத்தர்கள் உள்ளிட்ட சில தொழில் துறைக்கான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் விரைவில் அவை நிரப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட் டது.

ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் அமைச்சருமான இ. சந்திரசேகர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பல இடங்களில் பாராளுமன்ற உறுப்பினர் இ. அர்ச்சுனா கூட்டத்திலிருந்தவர்களிடம் கேள்விகளை எழுப்பிய அதேநேரம் தர்க்கங்களையும் விமர்சனங்களையும் செய்தார். அத்துடன், அவர்களை கேலி செய்வதையும் தொடர்ந்து கொண் டிருந்தார். பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனும் தர்க்கங்களை ஏற்படுத்தி யிருந்தார்.

கூட்டத்தில் ஒரு கட்டத்தில் யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்திக்கும் அர்ச்சுனா எம். பிக்கும் இடையே ஒரு கட்டத்தில் வாக்குவாதம் முற்றியது. இதன்போது, கருத்து வெளியிட்ட மருத்துவர் சத்திய மூர்த்தி, “கூட்டத்தில் பங்கேற்றவர்களை கண்ணியமாக நடத்த வேண்டும். அவர்களுக்கு மதிப்பளிப்பதை உறுதி செய்ய வேண்டும். நோயாளிகளாக்க வேண்டாம்”, என்று கூறினார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா, “கணக்குவழக்குகளை கேட்டால் ஏன் பதற்றம் ஆக வேண்டும்? - கேள்விகளை உரிய சந்தர்ப்பத்தில் கேட்டாக வேண்டும்”, என்று கூறியிருந்தார்.

நேற்றைய கூட்டத்தில் வீதி அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு, போக்கு வரத்து, மின்சாரம், வீடமைப்பு, சட்டம் ஒழுங்கு, கடற்றொழில், விவசாயம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தன.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், திணைக்கள தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# இலங்கைக்கு உதவும் பொறுப்பு அமெரிக்காவுக்கு உள்ளது!

## முன்னாள் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜூலை 18

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியில் கையொப்பமிட்ட நாடு என்ற வகையில் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு உதவும் பொறுப்பு அமெரிக்காவுக்கு உள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கா இப்போது இலங்கைக்கு வரி விடயத்தில் உதவ வேண்டும் என்ற அடிப்படையில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா இந்த விடயத்தில் உதவவில்லையெனில் அது, குறித்த ஒப்பந்தத்தை மீறுவதாகவே கருத முடியும். இந்தநிலையில், இலங்கை அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

கடன் மறுசீரமைப்பு விடயத்தில் அமெரிக்கா இலங்கைக்கு உதவவில்லை என்றால் சர்வதேச நாணய நிதியம், பங்குதாரர்களிடம் அமெரிக்காவுக்கு சென்று பணத்தை வசூலிக்குமாறு கூறவேண்டும் என ரணில் சுட்டிக்காட்டியுள்ளார்.

வியட்நாமின் தொழில்துறை அமைச்சர், அந்நிய செலாவணி உத்திகள் குறித்து இலங்கையிடம் முன்னர் ஆலோசனை கேட்டதை அவர் இதன் போது நினைவு கூர்ந்தார். இன்று வியட்நாம் முன்னணியில் உள்ளது. கம்போடியாவும் பங்களாதேஷும் முன்னேறி வருகின்றன. எனினும் இலங்கை தொடர்ந்தும் பிரச்னைகளை எதிர்கொண்டு வருகிறது - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# தாதியரின் ஓய்வு வயது வழக்கு; உயர்நீதிமன்றம் புதிய உத்தரவு

கொழும்பு, ஜூலை 18

அரசாங்க சேவையில் உள்ள தாதியர்களை 60 வயதில் கட்டாய ஓய்வு பெறச் செய்யும் முடிவை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் வகையில், மேன்முறையீட்டு நீதிமன்றம் முன்னர் பிறப்பித்த இடைக்கால தடை உத்தரவை உயர் நீதிமன்றம் நேற்று இரத்துச் செய்தது.

மேலும், இந்த விவகாரம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மீண்டும் விசாரிக்க உயர் நீதிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மற்றுமோர் உத்தரவையும் பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு சட்டத்துக்கு முரணானது என்றும், அது செல்லாது எனவும் கூறி, சட்டமா அதிபர் தாக்கல் செய்த மேன்முறையீட்டை விசாரித்த பின்னர், உயர் நீதிமன்றம் இந்த உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

யசந்த கோடகொட, ஜனக் டி சில்வா மற்றும் ஏ.எச்.எம்.டி. நவாஸ் ஆகிய 3 நீதியரசர்கள் கொண்ட ஆயமே இந்த உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. (ஐ)

# பெண்ணிடம் அத்துமீறல் 81 வயதான பிக்கு கைது!

கொழும்பு, ஜூலை 18

விகாரை ஒன்றுக்கு வந்த நியூசிலாந்து பெண்ணை பாலியல் துன்புறுத்தல் செய்த குற்றச்சாட்டில் 81 வயது பௌத்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி - ஹபரதுவ பகுதியிலுள்ள விகாரை ஒன்றின் தலைமை துறவியான இவர், பயணிக்கு உணவு, பானங்கள் வழங்கிய பின்னர், அவரை விகாரையில் உள்ள அறை ஒன்றுக்கு அழைத்துச் சென்று பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்று கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்ட பெண் உனவடுன பயணிகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தார். இதன் பின்னர், இந்த முறைப்பாடு ஹபரதுவ பொலிஸாருக்கு மாற்றப்பட்டது.

பாதிக்கப்பட்ட பெண் கராபிட்டி மருத்துவமனையில் சட்ட மருத்துவ அதிகாரியால் பரிசோதிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மனித...

புதைகுழிக்கு நீதி கோரி கொழும்பு புகையிரத நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. நீதிக்கான மக்கள் சக்தி அமைப்பின் அழைப்பின்பேரில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

“அனைத்து புதைகுழிகளுக்குமான நீதிக்கான குரலை பலப்படுத்துவோம். ஆட்சியாளர்கள்மீது நம்பிக்கை இல்லை என்பதை உலகுக்கு கூறுவோம். சர்வதேச தரத்திலான அகழ்வு பணி மட்டுமல்ல நீதிக்கான சர்வதேச தலையீட்டையும் குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படவும் குரல் எழுப்புவோம்”, என்ற கோஷத்துடன் நடந்த இந்தப் போராட்டத்தில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர்.

“புத்த தேசமா? புதைகுழிகள் தேசமா?”, “செம்மணியில் எலும்புகளாக எம்மவர்கள... சர்வதேசமே தமிழர்களை ஏமாற்றாதே...”, “போர் குற்றத்தின் சாட்சி செம்மணி”, “வடக்கு, கிழக்கில் நில ஆக்கிரமிப்பை நிறுத்து” போன்ற பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். (ஐ)

# சின்னாற்றில் சடலம் மீட்பு!

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு நகர பகுதியில் சின்னாற்றில் சடலம் ஒன்று நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டது.

ஆற்றில் மிதந்த சடலம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் செல்வாபுரத்தை சேர்ந்த 54 வயது நபர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இடமாற்றம்...

200ஆக அதிகரித்துள்ளது. இதனால், துணுக்காய் வலயத்தின் கற்றல் செயலபாடுகள் இன்னும் மோசமடைவதற்கான சூழ்நிலையே காணப்படுகிறது.

எமது பிள்ளைகளும் கல்வி கற்க வேண்டும். வன்னி என்றால் ஒதுக்கி விடுக்கின்ற நிலைமை. முல்லைத்தீவு மாவட்டம் என்றால் ஒதுக்கி விடுகின்ற நிலைமை - துணுக்காய் என்றால் ஒதுக்கி விடுகின்ற நிலைமை இருக்கக் கூடாது - அதனை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பொருளாதார மீட்சிக்கு எனது திட்டமே சிறந்தது

## அரசாங்கம் முறையாக செயற்படுத்தாவிடின் மீண்டும் நெருக்கடி என எச்சரிக்கிறார் ரணில்



கொழும்பு, ஜூலை 18

**பொருளாதார மீட்சிக்காக சிறந்த திட்டத்தை அமுல்படுத்தினேன். அத்திட்டத்தை அரசாங்கம் முறையாக செயற்படுத்தவேண்டும். அரசியல் பிரபல்யத்துக்காக ஏற்றுக்கொண்ட இணக்கப்பாடுகளை மாற்றியமைத்தால் மீண்டும் நெருக்கடி நிலைமை ஏற்படும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தனவினால் படைக்கப்பட்ட நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன ஐக்கிய தேசியக் கட்சி பற்றியே அதிகளவில் நூல்களை வெளியிட்டுள்ளார்.அதுவும் நன்மைக்கே ஏனெனில் 75 ஆண்டுகால அரசாங்கங்களை விமர்சிப்பவர்கள் இனியேனும் இவற்றை தெரிந்துக் கொள்ள வேண்டும்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இறப்பர் - அரிசி ஒப்பந்தம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வெளிப்படுத்துகிறது. 1953 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட அரிசி தட்டுப்பாட்டை தொடந்தே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

சீனாவுடன் முதலாவதாக வர்த்தக ரீதியிலான ஒப்பந்தத்தை கைச்சாத்திட்ட நாடாக இலங்கை காணப்படுகிறது.இதனைத் தொடர்ந்தே இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு பலமடைந்தது.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டிருநதார்.

குறுகிய காலத்தில் பொருளாதார மீட்சிக்கான சிறந்த திட்டங்களை அமுல்படுத்தியுள்ளேன். இந்த திட்டங்களை சிறந்த முறையில் அரசாங்கம் செயற்படுத்தினால் நிலையான முன்னேற்றத்தை அடைய முடியும். அரசியல் பிரபல்யத்துக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை மாற்றியமைத்தால் மீண்டும் நெருக்கடி நிலைமை ஏற்படும்-என்றார். (அ)

## கச்சதீவுப் பிரச்னையில் மோடி நேரடியாக தலையிடவேண்டும்

### தமிழக முதல்வர் வலியுறுத்து

சென்னை, ஜூலை 18

"கச்சதீவு பிரச்னையில் பிரதமர் மோடி நேரடியாக தலையிட்டு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்." - என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

"மீனவர்களின் நலனுக்காக அனைத்து நடவடிக்கைகளும் தமிழக அரசால் எடுக்கப்படுகிறது.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படுவதற்கு, நிரந்தர தீர்வாக கச்சதீவை மீட்க வேண்டும் என்று, பிரதமரிடம் வலியுறுத்தி வருகிறேன். கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி சட்டசபையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம்." - எனவும் தமிழக முதல்வர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் மீட்க, மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். தமிழர்கள் மீதும், தமிழக மீனவர்கள் மீதும் சிறிதும் அக்கறையில்லாத மத்திய பாரதிய ஜனதாக் கட்சி அரசு கச்சதீவை தாரை வார்த்தது யார் என்று அரசியல் மட்டும் தான் செய்கிறது.

10 ஆண்டுகளுக்கு மேல் பா.ஜ.க.தான் மத்தியில் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. இதுவரை கச்சதீவை மீட்க, மத்திய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழக மீனவர்களை இலங்கை அரசு கைது செய்வதை தடுக்கவோ, படகுகளை மீட்கவோ முயற்சி எடுக்கவில்லை."-எனவும் குற்றஞ்சாட்டினார்.

'கச்சதீவு கடல் பகுதியில் தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைகின்றனர். கச்சத்தீவை ஒருபோதும் விட்டுத்தர மாட்டோம்' என, இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் பேசி இருக்கிறார். அதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், இதுவரை எந்த பதிலும் தரவில்லை. பிரதமர் இப்பிரச்னையில் நேரடியாக தலையிட்டு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்காக தமிழக அரசும், தி.மு.க.,வும் தொடர்ந்து போராடும்." என ஸ்டாலின் மேலும் குறிப்பிட்டார்.(அ)

## புதிய கல்வி சீர்திருத்தத்தில் அழகியல் நீக்கப்படவில்லை!

### கல்வியை அரசியலாக்கவேண்டாம் என பிரதமர் ஹரிணி எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 18

புதிய கல்வி சீர்திருத்தங்களில் வரலாறு மற்றும் அழகியல் பாடங்கள் நீக்கப்பட்டுள்ளன என்ற பொய்யான மற்றும் அரசியல் நோக்கமுடைய பிரசாரங்கள் பரப்பப்படுவது மிகவும் கவலைக்குரியது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் பிரதமர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ், வரலாறு, அழகியல் மற்றும் ஒரு தொழிற்கல்வி பாடம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இவை நீக்கப்பட்டதாக பரப்பப்படும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை.

மனித குணங்கள் வளர, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த பாடங்கள் அவசியமானவை. அதனால் அனைத்து மாணவர்களுக்கும் இவை கட்டாயமாக வழங்கப்படும்.

அதோடு, கல்வியை அரசியலாக்கும் நோக்கத்தோடு தவறான தகவல்களை பரப்புவதைத் தவிர்க்க வேண்டும்.

கல்வி மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்தை பாதுகாக்க அனைவரும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். நாம் அரசியலில் ஈடுபடலாம். ஆனால் கல்வியையும், குழந்தைகளையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது-என்றார். (அ)

## இலங்கை-இந்திய மீனவர் விவகாரம் இரு தரப்புக்கும் இடையே உடன்பாடு

### வலியுறுத்துகிறது பாரதிய ஜனதா கட்சி

சென்னை, ஜூலை 18

இலங்கை இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இரண்டு தரப்பினரையும் உடன்பாடு ஒன்றுக்கு கொண்டு வருவதே முக்கியமானதாகும் என்று பாரதிய ஜனதா கட்சி தெரிவித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாகப் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான இந்திய மத்திய அரசு,

தமிழக கடற்றொழிலாளர்களை பாதுகாக்கத் தவறிவிட்டது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்கே இந்த பதில் வழங்கப்பட்டுள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் பேச்சாளர் நாராயண் திருப்பதி இந்த விடயம் தொடர்பில் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட இலங்கை தமிழ் கடற்றொழிலாளர்கள் மற்றும் இந்திய தமிழ் கடற்றொழிலாளர்களுடன் இந்த பிரச்னை தொடர்பில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

எனவே அவர்களுடன் பேசி ஒரு தீர்வைக் காணாவிட்டால், இந்தப் பிரச்னை முடிவடையப் போவதில்லை என்று நாராயண் திருப்பதி குறிப்பிட்டுள்ளார்.

1974 ஆம் ஆண்டு மத்திய காங்கிரஸ் ஆட்சியும், தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் இடம்பெற்ற போதே கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது.

இதனையடுத்து 14 ஆண்டுகள் ஆட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் பகிர்ந்து கொண்டபோதும், இந்த பிரச்னையைத் தீர்க்க முயலவில்லை என்றும் என்று நாராயண் திருப்பதி குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை,

கச்சதீவை மீட்டெடுப்பது மட்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்காது என்று கடல்சார் மற்றும் இராஜதந்திர நிபுணர்கள் கருத்துரைத்துள் ளதாக இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

உண்மையான பிரச்னை, இந்தியக் கடல் பகுதியில் மீன் வளங்கள் குறைவதன் காரணமாக, இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கைப் பகுதிக்குள் நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்றும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தநிலையில் கச்சதீவின் கட்டுப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு பதிலாக, இலங்கையுடன் நீண்ட கால குத்தகை அல்லது மீன்பிடி உரிமை ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து இந்தியா பரிசீலிக்க வேண்டும் என்று நிபுணர்களை சுட்டிக்காட்டி இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

## 2 தடவை எரிபொருள் கொடுப்பனவு பெறும் ஆளும் தரப்பு அமைச்சர்கள்

கொழும்பு, ஜூலை 18

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 19 அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் தங்களது அமைச்சு அதே போன்று பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கான எரிபொருள் கொடுப்பனவுகளை பெற்றுக் கொண்டுள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வட்டார தகவல்களின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.எரிபொருள் கொடுப்பனவு

எவ்வாறெனினும், பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட 30 பேர் பாராளுமன்றில் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை இடைநிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த கோரிக்கையின் அடிப்படையில் குறித்த 30 பேருக்கும் பாராளுமன்றில் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவு கடந்த ஏப்ரல் மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பாராளுமன்ற பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய அமைச்சர்களும் கோரிக்கை விடுத்தால் இந்த கொடுப்பனவை இடைநிறுத்த முடியும் என பாராளுமன்ற நிதி பிரிவு தெரிவித்துள்ளது.

ஏனைய மாதங்களிலும் இவ்வாறான ஒரு தொகை செலவிடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவர் வசிக்கும் மாவட்டத்தின் அடிப்படையில் எரிபொருள் கொடுப்பனவு பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

## பலத்த மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூலை 18

நிலவும் தென்மேற்கு பருவப்பெயர்ச்சியின் காரணமாக இன்று முதல் பலத்த மழையுடனான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளில் பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கடற்பிராந்தியங்களில் பலத்த காற்று வீசலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதேவேளை, காலி முதல் மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கலாமென திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு குறித்த பிரதேசங்களில் கடலுக்கு செல்ல வேண்டாம் என மீனவர்கள் மற்றும் கடல்சார் ஊழியர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org